**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வக்கோட்டை**

**OS No. 1/2021**

**பிரதிவாதிகள் தரப்பு 3 வது சாட்சி வெள்ளைச்சாமி** என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.அரவிந்த், பெஞ்ச் கிளார்க் (பொறுப்பு) என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**Cross Examination of DW.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெள்ளைச்சாமி | வயது | : | 53 |
| தந்தை பெயர் | : | பம்பையன் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | மோகனூர் | தொழில் | : | கூலிவேலை |

நாள் : 09.04.2026

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) எத்தனை அயிட்ட சொத்துக்களைப்பொறுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என்னை சாட்சி சொல்வதற்கு யார் அழைத்தது என்றால் 1ஆம் பிரதிவாதி ராமச்சந்திரன் அழைத்தார். வாதி, பிரதிவாதிகள் எனது உறவினர்கள், குடும்ப நண்பர்கள் இல்லை என்றால் சரிதான். வாதி, பிரதிவாதிகளின் குடும்ப சொத்து எவ்வளவு உள்ளது அதன் சர்வே எண்கள், விஸ்தீரணம், நான்கெல்லைகள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு விபரம் கூறியது யார் என்றால் ராமச்சந்திரன் கூறினார். அதில் நான் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரிதான். வாதி, 1 ஆம் பிரதிவாதி குடும்பத்தில் எப்போது பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் குடும்பத்தில் பாகப்பிரிவினை நடைபெற்ற போது நான் கலந்து கொள்ளவில்லை என்றாலும் அதில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரிதான்.

2) நான் 30 வருடங்களுக்கு முன்பு எங்கு வசித்தேன் என்றால் மோகனூர் கிராமத்தில் தான் வசித்தேன். ராமச்சந்திரன் அவ்வப்போது கூலிவேலைக்கு அழைப்பார், நானும் செல்வேன். இவ்வழக்கினை யார், யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் சுப்பையா, ராமச்சந்திரன் மீது தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. தாவா சொத்துக்களை நான் நேரில் பார்த்ததில்லை என்றால் சரிதான். சுப்பையா ஏற்கனவே இரண்டு முறை பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றால் எனக்கு அவர் ஒரு முறை பஞ்சாயத்து தலைவராக இருந்ததது தான் தெரியும். சுப்பையா பஞ்சாயத்து தலைவராக இருந்த காலகட்டத்தில் மர வியாபாரம் செய்து வந்தார் என்றால் அதை நான் பார்த்ததில்லை. அவர் எந்த வருடம் பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றால் எனக்கு

தெரியாது. கடனுக்காக ஆவணம் எழுத வேண்டும் என்றால் புரோநோட், காசோலை, அடமானப்பத்திரம் ஆகிய ஆவணங்கள் தான் எழுத வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அவர்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். அவர்களுக்கு எத்தனை கிராமத்தில் சொத்துக்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் நான் இரண்டு கிராமங்களில் அவருக்கு இருந்த சொத்திற்கு வேலைக்கு சென்றேன். மற்ற கிராமங்களில் இருந்ததா என்று தெரியவில்லை.

3) வாதி எந்த வங்கியில், எவ்வளவு தொகை, எந்த வருடம் கடன் பெற்றார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதி சொல்லிக்கொடுத்ததற்கு இணங்க பாகப்பிரிவினை பத்திரம் பெயரளவில் ஏற்பட்டதாக நான் சொல்லியுள்ளேன் என்றாலும் பாகப்பிரிவினை பத்திரம் உண்மையாக ஏற்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல. வாதி மற்றும் 1ஆம் பிரதிவாதி பெயரில் தனித்தனியாக பட்டா ஏற்பட்டுள்ளது என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். வீரடிப்பட்டி கிராமத்தில் உள்ள எந்த சொத்தில், 1ஆம் பிரதிவாதி விவசாயம் செய்து வந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் எந்த சொத்து என்று குறிப்பாக தெரியவில்லை, என்னை வேலைக்கு அழைத்துச் செல்வார், அவர் சொல்லும் சொத்தில் வேலை செய்வேன். சர்வே எண் 302/4 இல் கண்ட சொத்தில் வாதி, கடலை, நெல் விவசாயம் செய்து வருகிறார் என்றாலும் அந்த சொத்தைப் பொறுத்து வாதி பெயரில் பட்டா ஏற்பட்டு அவரது தொடர்ச்சியான அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. அதில் வாதி போர் அமைத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1ஆம் பிரதிவாதி ராமச்சந்திரனிடம் அவருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் நான் கூலிவேலை செய்து வருவதால், அவர் சொல்லிக்கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.04.09 16:51:22 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**